**பன்னல பிரதேச சபை**
**குருணாகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பன்னல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 05 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீதி ரூபா 214,747,057 ஆயினும், உப ஏடுகளின் பிரகாரம், மீதி ரூபா 207,767,533 ஆகக் காணப்பட்டதனால் ரூபா 6,979,524 பெறுமதியான வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாட்டை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | 2019 இன் இறுதி நிதிக்கூற்றுகளின் பிரகாரம் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | ரூபா 15,389,078 பெறுமதியான 4 கணக்கு விடயங்களுக்கு உரிய சாட்சி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதி உறுதிப்படுத்தப்பட்டு சாட்சி சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களினால் இணக்கமின்மை காணப்படுவதுடன் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி (i) விதி 193 | பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பனவற்றிற்கு இடையிலான பகுப்பாய்வு தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்று ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதி தொடர்பான விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிலிருந்து தயாரித்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (ii) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகளும் கட்டடங்களும் ஒரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் உப ஏடு மற்றும் காணி மற்றும் கட்டடம் தொடர்பான ஏடு என்பனவற்றிற்கு இடையில் இணக்கமின்மை காணப்பட்டது. | விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | பத்திரத்துடன் சபை அனுபவிக்கும் காணிகளுக்கு மாத்திரம் காணிப்பதிவேடு காணப்படுவதுடன் இறுதி நிதிக்கூற்றுடன் இணங்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 89,654,732 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,142,498 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் இலங்கை வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கில் 2018 ஜனவரி தொடக்கம் ஒக்தோபர் வரை குறைந்தது ரூபா 25 மில்லியன் ஆன | சபை நிதியை பயனுறுதி வாய்ந்த விதத்தில் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட தவறு எதிர்காலத்தில் திருத்தப்பட்டு சபைக்கு |

| | | |
|---|---|---|
| தொகை பயனற்ற விதத்தில் பேணப்பட்டிருந்தாலும், அம்மிகை நிதியை பயனான விதத்தில் பயன்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த வேண்டும். | சொந்தமான நிதி பயனுறுதி வாய்ந்த விதத்தில் பயன்படுத்தப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| I | வீதவரியும் வரியும் | 10,254 | 9,820 | 9,475 | 2,245 | 9,421 | 11,220 | 12,182 | 2,587 |
| II | வாடகை | 22,546 | 22,238 | 21,911 | 2,267 | 22,310 | 21,464 | 22,238 | 4,128 |
| III | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,386 | 1,378 | 1,378 | - | 1,385 | 1,384 | 1,384 | - |
| IV | ஏனைய வருமானம் | 152,559 | 113,002 | 113,445 | - | 129,320 | 116,031 | 113,915 | 56,608 |
| | மொத்தம் | 186,745 | 146,438 | 146,209 | 4,512 | 162,436 | 150,099 | 149,719 | 63,323 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஹமன்கல்ல உப காரியாலயத்தில் 03 வருடத்திற்கு மேற்பட்ட ஏக்கர் வரி நிலுவை ரூபா 332,131 ஆக இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 264,466 ஆக இருந்தது. மேலும் கடை 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வாடகை ரூபா 13,200 ஆகும். | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | ஏக்கர் வரி பதிவேட்டை திருத்துவதற்கும் நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்கு அல்லது வெட்டி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மாகந்துர உப காரியாலயத்தில் 05 வருடத்திற்கு மேற்பட்ட வீத வரி நிலுவை ரூபா 97,581 ஆக இருந்ததுடன் நிலுவை வீத வரி ரூபா 166,206 ஆகும். | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | வரி பதிவேட்டை திருத்துவதற்கும் நிலுவை வரியை அறவிடுவதற்கு அல்லது வெட்டி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 2,267,000 ஆகும். | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | கடை வாடகையை அறவிடுவதற்கான அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் 02 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளது. |

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| <u>நீதிமன்றத் தண்டப்பணம்</u><br><br>உள்ளூராட்சிமன்ற பிரதான செயலாளரிடமும் ஏனைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களிடமும் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,012,768 தொகை மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 97,265,336 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | முத்திரை கட்டணம், நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 51 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைக்கு ஏற்ப உபவிதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். உபவிதிகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 51 உப விதிகள் காணப்படுவதுடன் அவற்றுள் 42 நிறைவேற்றப்பட்டவைகள் ஆகும். சுபையின் தேவைக்கு ஏற்ப மேலும், 09 உப விதிகள் பிறப்பிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வரும் நிலுவை ரூபா 99,637,503 ஐ அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 48,419,187 பெறுமதியான செலுத்த வேண்டிய கணக்கு நிலுவையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு நிலுவைகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்தி முடிக்கதற்கு அல்லது சபை முடிவுக்கு அமைய வருமானமாக எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படும் வெற்றிடங்கள் 39 ஆகும். இவற்றுள் அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடம் 19, அலுவலக தொழிலாளர் வெற்றிடம் ஒன்றும் அடங்கும். | உரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கும் மிகையை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய முறைப்படி அங்கீகாரம் பெற்றுக் கொண்டு வெற்றிடமாகவுள்ள பதவியணியினர்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் உள்ளூராட்சிமன்ற திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள 19 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எமது அலுவலக அறிக்கையில் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. அலுவலக தொழிலாளர் நியமனத்தை அங்கீகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் தொகை ரூபா 205,394 நீண்ட காலமாக அறவிடப்படவில்லை. | அறவிடப்படாத ஊழியர் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்படும் ஊழியர் கடன் பிணையாளரிடம், ஓய்வூதிய பணிக்கொடையில் அறவிடுவதற்கும், அறவிடப்படாத மீதியை சபை தீர்மானத்திற்கு அமைய பதிவழிப்பதற்கும் |

நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத ரூபா 63,217 பெறுமதியான 521 புத்தகங்கள் மற்றும் மாகந்துர வாசிகசாலையில் இரவல் பெற்றுக் கொண்டு மீளளிக்கப்படாத ரூபா 83,589 பெறுமதியான 336 புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பொருள் மெய்மையாய்வு பரிந்துரை செயற்படுத்தப்படும் போது பின்னர் கிடைத்த புத்தக ஆய்வு பதிவுகளில் குறிக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கையில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.5 சர்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 1882/22 ஆம் இலக்க வர்த்தமானிப்பத்திரத்தில் வெளியிடப்பட்ட வீடு, சொத்துக்களை அபிவிருத்தி செய்து விற்பது தொடர்பான இடைக்கால ஏற்பாட்டிற்கு இணங்க சபையினால் வழங்கப்பட்ட நிபந்தனைக்கு அமைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, பொது வசதிகளிற்காக உரித்துப் பத்திரம் பதிவு செய்யப்படாமை, 1 % வரித் தொகைக்குரிய ரூபா 578,545 மதிப்பிடப்பட்ட பெறுமதியை செலுத்தாமை, தேயிலை, தேங்காய், இறப்பர் துண்டாக்கல் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது 16 ஏக்கர் 01 ரூட் 27.4 பேர்ச் அளவிலான அலபடகம பள்ளியவத்த காணி அபிவிரத்தி | உப விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த சகல அபிவிருத்தி நிபந்தனைகளை பூர்த்தி செய்து காணிகளைத் துண்டாக்கிஅ ங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக உரிய நிறுவனம் 2019.03.27 ஆந் திகதிய சத்தியக் கடிதம் வழங்குவதற்கு உறுதியளித்திருந்தது. |

செய்யப்பட்டு விற்பனை செய்தமை தொடர்பாகநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.6.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் முறைப்படி நடைமுறையூடாக பேணப்படாமல் இருந்ததுடன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடிப்படையில் சொத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். | தலைமை அலுவலகத்தில் உறுதி மூலம் காணப்படும் பிரதேச சபையின் காணி பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அபிவிருத்தி சபை காணப்பட்ட காலம் முதல் பிரதேச சபை உடமை கொள்ளும் வரை பயன்படுத்தப்பட்டு பிரதேச சபை உடமை கொண்டிருந்ததுடன் காணி சீர்த்திருத்த ஆணைக் குழுவிற்குச் சொந்தமான பல காணிகள் பிரதேச சபை வசம் காணப்பட்டன. |

### 3.6.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆணஷ்டில் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த பேரூந்து நிறுத்துமிட கடைகள் மற்றம் யக்வில வாரச்சந்தை என்பவற்றை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இச்சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை |

### 3.6.3 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 நீர்ப் பம்பிகள் மற்றும் வோட்டர் டிபென்டர் என்பன விளைவற்ற வரைகயில் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அப்பொருட்களை | இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். | இரண்டு நீர் பம்பிகளும் செயற்பாட்டிலுள்ளதா என பரீட்சித்து அதன் பெறுமதி மதிப்பிடப்பட்டு பொருள் |

| | | |
|---|---|---|
| இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |

**04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளயர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் |